ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2022.12.30 |

# இலங்கை சுபீட்சச் சுட்டெண் - 2021

## தேசிய சுபீட்சம்

| | 2020 | 2021 |
|---|---|---|
| *இலங்கை சுபீட்சச் சுட்டெண்* | *0.764* | *0.796* |
| ***துணைச் சுட்டெண்கள்*** | | |
| *பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல்* | *0.799* | *0.825* |
| *மக்கள் நலனோம்புகை* | *0.781* | *0.786* |
| *சமூக - பொருளாதார உட்கட்டமைப்பு* | *0.711* | *0.777* |

இலங்கை சுபீட்சச் சுட்டெண் (SLPI)[1] 2021இல் 0.796 கொண்ட சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்ததுடன், இது, கொவிட்-19 உலகளாவிய பெருந்தொற்றினால் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த 2020ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 0.764 உடன் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது. 'பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல்', 'மக்கள் நலனோம்புகை' மற்றும் 'சமூக பொருளாதார உட்கட்டமைப்பு' ஆகிய துணைச்சுட்டெண்களில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்புக்கள் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பிற்குப் பங்களித்தன.

வரைபடம் 1: இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்களின் அசைவுகள்: 2017 - 2021




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2: இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்படும் அம்சங்கள்




2021இல் பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஒட்டுமொத்த அதிகரிப்பிற்கு 2020 உடன் ஒப்பிடுகையில், பெயரளவு நியதிகளில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி, தொழில்நிலை, கூலிகள் மற்றும் கைத்தொழில் அடர்த்தி என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் தூண்டுதலாக அமைந்தன. எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியான உயர்ந்த பணவீக்கம் துணைச் சுட்டெண்ணின் மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

மக்களின் நலனோம்புகை துணைச் சுட்டெண்ணில் அவதானிக்கப்பட்ட சிறிதளவு அதிகரிப்பிற்கு 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் கல்விக்கான வசதிப்படுத்தல்களும் மக்களின் செல்வத்தில் காணப்பட்ட முன்னேற்றங்களும் முனைப்பான காரணங்களாக விளங்கின. எனினும், கல்விச் செயலாற்றம் குறைவடைந்தமை மற்றும் மருத்துவ அலுவலர்களின் குறைவான கிடைப்பனவு, சூழலின் சுத்தமான தன்மை குறைவடைந்தமை மற்றும் பொழுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபாடு குறைவடைந்தமை போன்றவற்றின் காரணமாக சுகாதார வசதிகள் வீழ்ச்சியடைந்தமை இத்துணைத் துறையின் செயலாற்றத்திற்கு எதிர்மறையாகப் பங்களித்தன.

2021ஆம் ஆண்டுப்பகுதியில், மின் வழங்கல், தொலைபேசி வசதிகள் அதேபோன்று, வீதி அபிவிருத்தி என்பனவற்றில் ஏற்பட்ட விரிவாக்கமானது, பொதுப்போக்குவரத்து வசதிகளின் பயன்பாட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, சுத்தமானதும் பாதுகாப்பானதுமான நீரின் கிடைப்பனவு குறைவடைந்தமை 2021ஆம்

[1] இலங்கை சுபீட்சச் சுட்டெண் என்பது நாட்டின் சுபீட்ச மட்டத்தினை அளவிடுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கூட்டுக் குறிகாட்டியாகும். இச்சுட்டெண் மூன்று துணைச் சுட்டெண்களை அதாவது சுபீட்சத்தின் வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ள 41 மாறிகளினால் அளவிடப்பட்டவாறான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்களின் நலனோம்புகை மற்றும் சமூக-பொருளாதார உட்கட்டமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுக்கும் முறையியலானது நாடுகளின் பொருளாதார சமூக நலனோம்புகையினை மதிப்பிடுவதற்கான உலகளாவிய குறிகாட்டியாக விளங்கும் லெகாட்டம் சுபீட்சச் சுட்டெண் தொகுப்பதில் ஈடுபடுத்தும் முறையியலை நுட்பமாக பின்பற்றி 2020 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது.

ஆண்டுப்பகுதியில் குற்றங்களின் எண்ணிக்கை உயர்வடைந்தமை என்பனவற்றின் காரணமாக சமூக பொருளாதார உட்கட்டமைப்பு சுட்டெண்ணின் மீது ஏற்பட்ட எதிர்மறையான தாக்கத்தினை மிதமாக்கியுள்ளது.

## மாகாண ரீதியான சுபீட்சம்

2021இல் ஒன்பது மாகாணங்களிடையே, மேல் மாகாணம் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் உயர்ந்த பெறுமதியினை ஈட்டிக்கொண்ட வேளையில் தென் மற்றும் வட மேல் மாகாணங்கள் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் தரப்படுத்தப்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றத்தினை பரிசீலனையில் கொள்ளும்போது வட மேல் மாகாணம் மிக உயர்ந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்ததுடன் அதனைத்தொடர்ந்து, தென் மாகாணமும் மேல் மாகாணமும் காணப்பட்டன. அதேவேளை, ஊவா, சப்பிரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்கள் மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்ணில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

வரைபடம் 3: மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்கள்[2]: 2020 – 2021




அட்டவணை 1: மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்கள் மற்றும் மாகாண நிலைகள்

| | சுபீட்சச் சுட்டெண் | | மாகாண நிலை | |
|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2020 | 2021 |
| *மத்திய* | 0.556 | 0.559 | 3 | 4 |
| *கிழக்கு* | 0.519 | 0.519 | 7 | 7 |
| *வட மத்திய* | 0.524 | 0.521 | 6 | 6 |
| *வட மேல்* | 0.549 | 0.564 | 4 | 3 |
| *வடக்கு* | 0.540 | 0.541 | 5 | 5 |
| *சப்பிரகமுவ* | 0.502 | 0.499 | 8 | 8 |
| *தென்* | 0.571 | 0.582 | 2 | 2 |
| *ஊவா* | 0.476 | 0.468 | 9 | 9 |
| *மேல்* | 0.791 | 0.802 | 1 | 1 |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

## மாகாண ரீதியான சுபீட்ச துணைச் சுட்டெண்களின் செயலாற்றம்

### பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்

துணைச் சுட்டெண்ணில் வட மேல் மாகாணம் மிக உயர்ந்த மேம்பாட்டினைப் பதிவுசெய்தமைக்கு தலைக்குரிய மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியிலும் தொழில்நிலை மற்றும் முறைசாரா துறைக் கூலிகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணங்களாகும். 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் அனைத்து மாகாணங்களிலும் ஒப்பீட்டு ரீதியில் தளம்பல்களும் உயர்ந்த பணவீக்கமும் பதிவுசெய்யப்பட்டமைக்கிடையிலும், சப்பிரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களின் துணைச் சுட்டெண்ணில் முன்னேற்றங்கள் பதிவுசெய்யப்பட்டன. மற்றைய மாகாணங்களில் துணைச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு 2021இல் தொழில்நிலை அம்சங்களில் ஏற்பட்ட மோசமான தன்மைகளை முக்கிய காரணமாக அமைந்தன.

### மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்

அனைத்து மாகாணங்களிலும் துணைச் சுட்டெண் மேம்பட்டமைக்கு அதிகரித்த சுகாதாரச் செலவினம் கல்விக்கான வசதிகள் உயர்வடைந்தமை அதிகரித்த சிறப்பு அங்காடிகளின் கிடைப்பனவு மற்றும் கொவிட்-19 இற்கெதிராக எடுக்கப்பட்ட முன்னெச்சரிகை நடவடிக்கைகளின் விளைவாக, சுவாசம் சம்பந்தமான நோய்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை என்பன முனைப்பான காரணங்களாக அமைந்தன. துணைச் சுட்டெண்ணில் மிக உயர்ந்த முன்னேற்றம் கிழக்கு மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்ட வேளையில் சப்பிரகமுவா மாகாணம் மிகக் குறைந்த அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

### சமூக-பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்

இத் துணைச்சுட்டெண்ணில் ஆறு மாகாணங்கள் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தவிடத்து பாரிய அதிகரிப்பு மேல் மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்டது. மின்வலு, தொலைபேசி, வீதி அபிவிருத்தி போன்ற உட்கட்டமைப்புக்களில் செய்யப்பட்ட முன்னேற்றங்கள் இத்துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்பிற்கான முக்கிய காரணங்களாக அமைந்தன. அதேவேளை, பாதுகாப்பான குடிநீரின் கிடைப்பனவு குறைவடைந்தமை மற்றும் பொதுப் போக்குவரத்து குறைந்தளவில் பயன்படுத்தப்பட்டமை என்பனவற்றின் காரணமாக சப்பிரகமுவா, ஊவா மற்றும் வட மேல் மாகாணங்கள் துணைச் சுட்டெண்ணில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன.

அட்டவணை 2: மாகாண ரீதியான சுபீட்ச துணைச் சுட்டெண்கள்[2]

| | 2020 | 2021 |
|---|---|---|
| **பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்** | | |
| *மத்திய* | 0.576 | 0.565 |
| *கிழக்கு* | 0.579 | 0.548 |
| *வட மத்திய* | 0.573 | 0.552 |
| *வட மேல்* | 0.571 | 0.586 |
| *வடக்கு* | 0.593 | 0.582 |
| *சப்பிரகமுவ* | 0.516 | 0.520 |
| *தென்* | 0.542 | 0.545 |
| *ஊவா* | 0.515 | 0.499 |
| *மேல்* | 0.863 | 0.866 |
| **மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்** | | |
| *மத்திய* | 0.555 | 0.567 |
| *கிழக்கு* | 0.511 | 0.536 |
| *வட மத்திய* | 0.545 | 0.558 |
| *வட மேல்* | 0.571 | 0.580 |
| *வடக்கு* | 0.586 | 0.587 |
| *சப்பிரகமுவ* | 0.526 | 0.527 |
| *தென்* | 0.604 | 0.619 |
| *ஊவா* | 0.494 | 0.498 |
| *மேல்* | 0.734 | 0.742 |
| **சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்கள்** | | |
| *மத்திய* | 0.536 | 0.544 |
| *கிழக்கு* | 0.467 | 0.473 |
| *வட மத்திய* | 0.455 | 0.452 |
| *வட மேல்* | 0.506 | 0.525 |
| *வடக்கு* | 0.439 | 0.455 |
| *சப்பிரகமுவ* | 0.464 | 0.449 |
| *தென்* | 0.567 | 0.583 |
| *ஊவா* | 0.420 | 0.407 |
| *மேல்* | 0.775 | 0.798 |

[2] சுட்டெண் பெறுமானங்கள் கடந்த 15 ஆண்டுகளில் பதிவாகிய அதன் சிறப்பானதும் மோசமானதுமான பெறுமானங்கள் தொடர்பில் ஒவ்வொரு மாறியையும் சீராக்குவதன் மூலம் தொகுக்கப்பட்டன. சீராக்கப்பட்ட மாறியின் மூலம் எடுக்கப்படக்கூடிய அதிஉயர்வான மற்றும் ஆகக்குறைந்த பெறுமானங்கள் முறையே 1 மற்றும் 0 ஆகும். அதன் மூலம், சுட்டெண் பெறுமதிகள் 0 இற்கும் 1 இற்கும் இடையிலான வீச்சாகவும் காணப்படுகின்றன. இதனால் உயர்வான சுட்டெண் பெறுமானம் என்பது குறித்த காலத்திலும் மாகாணங்கள் ரீதியிலும் அதன் செயலாற்றம் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். அத்துடன் நேர்மாறாகவும் காணப்படும்.

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

### தொழில்நுட்பக் குறிப்பு:

**சுபீட்சச் சுட்டெண்**

சுபீட்சச் சுட்டெண், 41 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டிருப்பதுடன் மூன்று துணைச் சுட்டெண்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களும் சுபீட்சச் சுட்டெண்ணில் சமமான நிறையினைக் கொண்டிருக்கின்றன.

பொருளாதார வியாபார சூழல் துணைச் சுட்டெண்ணானது விலை உறுதிப்பாடு, வாழ்க்கைத்தரம், வருமானம், வறுமை, தொழில்நிலை, கைத்தொழில் அடர்த்தி மற்றும் வங்கித்தொழில் அடர்த்தி ஆகிய வகைகளாக்கப்பட்ட 9 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்படுகிறது. மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்ணைத் தொகுக்கும் போது சுகாதாரக் கவனிப்பு வசதிகள் கிடைக்கும்தன்மை, கல்வி வசதிகள் கிடைக்கும்தன்மை மற்றும் தரம், செல்வம், பொழுதுபோக்கு வசதிகள் கிடைக்கும்தன்மை மற்றும் பயன்பாடு, வளியின் தரம் மற்றும் சூழலின் சுத்தமான தன்மை என்பன தொடர்பான 22 மாறிகளை உள்ளடக்கித் தொகுக்கப்படுகிறது. சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் 10 மாறிகளை உள்ளடக்கி இருப்பதுடன் அவை தொடர்பான அம்சங்களாக போக்குவரத்து வசதிகள் கிடைக்கும்தன்மை, வீதி உள்ளடக்கம் கிடைக்கும்தன்மை, தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகள் கிடைக்கும்தன்மை, மின்வலு கிடைக்கும்தன்மை, பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீர் வசதிகளின் கிடைக்கும்தன்மை, சுகாதாரம் கிடைக்கும்தன்மை, குற்றச்செயலற்ற சூழல் என்பன காணப்படுகின்றன.

**முறையியல்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுப்பதில் பயன்படுத்தப்படும் மாறிகள் அளவீட்டின் பல்வேறுபட்ட அலகுகளின் வடிவில் காணப்படுகின்றன. ஆகவே, கடந்த பதினான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தரவுகளை தரப்படுவதன் மூலம் பொதுவான அளவு ஒன்றிற்கு இவ்வனைத்து மாறிகளும் மாற்றியமைக்கப்படுகின்றன. நாடு மற்றும் மாகாணங்களுக்கான சுட்டெண் பெறுமதிகள் தனித்தனியாக தொகுக்கப்படுவதனால் மாகாண ரீதியான சுட்டெண்களை தேசிய மட்டத்தில் அமைந்த சுட்டெண்களுடன் ஒப்பிட முடியாது. எனவே, மாகாண ரீதியான மட்டத்திலமைந்த சுட்டெண்களை மாகாணங்களுக்கிடையே அத்துடன் காலத்துடன் ஒப்பிட முடியாத அதேவேளை தேசிய மட்டத்திலான சுட்டெண்களை கால அளவில் மட்டுமே ஒப்பிடமுடியும்.

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுக்கும் முறையியலானது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நலனோம்புகை மதிப்பீடு செய்யும் உலகளாவிய குறிகாட்டியான லெகடம் சுபீட்சச் சுட்டெண் தொகுப்பதில் ஈடுபடுத்தப்படுகின்ற முறையியலை நுட்பமாக பின்பற்றி 2020 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் தனிப்பட்ட மாறிகளை தரப்படுத்துவதற்குப் பதிலாக தொலைவிலிருந்து எல்லை அணுகுமுறையைப் பின்பற்றி கடந்த 15 ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட அதன் சிறப்பானதும் மோசமானதுமான பெறுமானங்களைப் பொறுத்து ஒவ்வொரு மாறியையும் சீராக்குவதன் மூலம் திருத்தம் செய்யப்பட்டது. இதனூடாக சுட்டெண்ணின் வீச்சு 0 இற்கும் 1 இற்கும் இடைப்பட்டிருந்தால் அது அதிகம் மிகவும் புரிந்துகொள்ளக்கூடியதுடன் உயர்வான சுட்டெண் பெறுமதி அதன் செயலாற்றத்தை ஒப்பீட்டளவில் உயர் என்பதையும் குறைவான பெறுமதி குறைவான செயலாற்றமும் ஆகும்.